# 21-06-2024 செய்தி

## சாத்தியமாகுமா அனைவருக்குமான பிரதிநிதித்துவம்?

**விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத் தேர்தல்**

- விகிதாச்சாரத் தேர்தல் முறையில், ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்கு விகிதாச்சாரத்துக்கு ஏற்ப சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்தில் இடங்கள் வழங்கப்படுகின்றன.
- உதாரணத்துக்கு, சட்டமன்றத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 100 என வைத்துக்கொண்டால் 1% மட்டுமே வாக்குகள் பெற்ற ஒரு கட்சிக்கு அது பெற்ற வாக்கு சதவீதத்துக்கு ஏற்ப ஓர் இடம் கிடைத்துவிடும்.
- அரசில் கட்சிகள் அது பெற்ற வாக்கு சதவீதத்துக்கு ஏற்ப ஓர் இடம் கிடைத்துவிடும். அரசியல் கட்சிகள் களமிறங்கும் கட்சிப் பிரதிநிதிகளின் பட்டியலை முன்கூட்டியே சமர்ப்பிக்க வேண்டும்.
- கட்சிக்குக் கிடைக்கும் மொத்த வாக்குகளுக்கு ஏற்ப ஏற்கெனவே கட்சி அளித்துள்ள பெயர்ப் பட்டியலின்படி, நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களாக அறிவிக்கப்படுவார்கள்.
- தனித்து ஆட்சி அமைக்கப் பெரும்பான்மை இல்லாவிட்டால் ஒரே எண்ணம் கொண்ட கட்சிகளுடன் கூட்டணியாக ஆட்சி அமைக்கலாம்.

**ஏன் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்?**

- மக்கள் தங்களை ஆதரித்திருக்கிறார்கள் என்றால், குறைந்தபட்சம் பதிவாகியதில் 50% வாக்குகளாவது வெற்றி பெற்ற கட்சி வாங்கியிருக்க வேண்டும்.
- ஆனால், இந்தியாவில் சுதந்திரத்துக்குப் பின்னர் நடந்த எந்தத் தேர்தலிலும், மத்தியில் ஆட்சி அமைத்த எந்தக் கட்சியும் 50% வாக்குகளைப் பெற்றதில்லை.
- 1952 முதல் தேர்தலில் ஆட்சி அமைத்த காங்கிரஸ் பெற்றது 44.99% . அடுத்த தேர்தலில் (1957) 47.18%. 1962ல் 44.72% 1967இல் 40.79%. 1971இல் 43.68%, 1977 தேர்தலில் ஜனதா கட்சி 41.32% வாக்குகளைப் பெற்றது.
- 1984 தேர்தலில் காங்கிரஸ் அதிகபட்சமாக 49% பெற்றது. இந்நிலையில், வாக்களித்த பெரும்பான்மை மக்களின் விருப்பம் நிராகரிக்கப்படுவதை உணர முடிகிறது.
- அது மட்டுமல்லாமல், கட்சிகள் பெறும் வாக்கு சதவீதத்துக்கும் வெற்றி பெறும் தொகுதிகளின் எண்ணிக்கைக்கும் சம்பந்தமில்லை.
- 2019 மக்களவைத் தேர்தலில் தேசிய அளவில் 37.7% வாக்குகளைப் பெற்ற பாஜக, மக்களவையில் 55.8% இடங்களை (303) பெற்றது.
- 19.67% வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ் 9.57% இடங்களை (52) மட்டுமே பெற்றது. நடந்து முடிந்த 2024 தேர்தலில் 36.56% வாக்குகளைப் பெற்ற பாஜக 240 இடங்களைப் பெற்றது.
- இது 44% இடங்களாகும். 21.19% வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ் 99 இடங்களைப் பெற்றுள்ளது. இது 18% இடங்களாகும்.
- காங்கிரஸ் பெற்ற வாக்குகளுக்கு 114 இடங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

**கருத்தாக்கம் இருந்ததா?**

- 1948 ஜனவரி 8 ஆம் தேதியிலிருந்து 1949 ஜனவரி 4 ஆம் தேதிவரை நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதை இசட்.எச்.லாரி, ஹுசேன் இமாம், டி.எச், சந்திரசேகரய்யா ஆகியோர் வலியுறுத்தினர்.
- கே.டி.ஷா, மகபூப் அலிபெய்க், சர்தார் ஹுக்கும் இதே கருத்தை வெளிப்படுத்தினர்.
- 1962இல் கோவையில் நடைபெற்ற தி.மு.க பொதுக்குழுவிலும், மாநாட்டிலும், தேர்தல் அறிக்கையிலும் இந்தியாவுக்கு விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை வேண்டும் என்று அண்ணா வலியுறுத்தினார்.
- 1974இல் ஜெயபிரகாஷ் நாராயணனால் நியமிக்கப்பட்ட தாரக்குண்டே குழு ஜெர்மனியில் இருப்பது போன்ற தேர்தல் முறை இந்தியாவுக்கு வேண்டும் எனப் பரிந்துரைத்தது.

**பலன் என்ன?**

- தற்போது இருக்கும் தேர்தல் முறையில், பெரும்பான்மை மக்களின் கருத்துக்கள், விருப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. மேலும், ஜனநாயகம் என்பது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வாக்களித்து ஆட்சிக்கு வருவது மட்டுமல்ல.
- விவாதத்தின் மூலம் அரசாங்கத்தை நடத்துவதும் தான். நாடாளுமன்றத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் இல்லை என்பதே உண்மை.
- அனைத்து வாக்குகளுக்கும் மதிப்பளிக்கும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை வந்தால், அனைத்து மக்களின் பிரதிநிதிகளும் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் பங்கேற்க வாய்ப்பு உருவாகும்.

## மாநில மனித உரிமைகள் ஆணைய தலைவராக ஓய்வு பெற்ற நீதிபதி மணிகுமார் நியமனம்

- மாநில மனித உரிமைக் ஆணையத்தின் தலைவராக கேரள உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி எஸ்.மணிகுமாரை நியமித்து ஆளுநர் ஆர்.என்.ரவி உத்தரவிட்டுள்ளார்.
- மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாநில முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், மாநில உள்துறை அமைச்சர் சட்டப் பேரவை தலைவர் ஆகியோர் அடங்கிய குழுவால் தேர்வு செய்யப்பட்டு, அக்குழு பரிந்துரைப்பவரை ஆளுநர் நியமனம் செய்வார்.
- இவர் 3 ஆண்டுகள் அல்லது 70 வயது நிறைவு என இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரை பதவியில் இருப்பார்.

## லோக்சபாவுக்கு இடைக்கால சபாநாயகர் நியமனம்

- முதல் மூன்று நாட்கள் புதிய எம்.பி.க்களின் பதவியேற்பு நடக்கவுள்ளது.
- சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படும் வரை புதிய எம்.பி.க்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பது, சபையை நடத்துவது இடைக்கால சபாநாயகரின் பொறுப்பு.
- இந்நிலையில் இடைக்கால சபாநாயகராக ஒடிசாவின் கட்டாக் தொகுதி எம்.பி.,யான பரத்ருஹரி மஹதாப்பை ஜனாதிபதி திரவுபதி முர்மு நேற்று நியமித்தார்.
- இவர் 6 முறை பிஜு ஜனதா தளம் சார்பில் கட்டாக் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- மார்ச்சில், அக்கட்சியில் இருந்து விலகி பா.ஜ.வில் சேர்ந்து, அதே கட்டாக் தொகுதியில் போட்டியிட்டு ஏழாவது முறையாக எம்.பி.,யாக வெற்றி பெற்றார்.

